RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-5 | இதழ்- 186 | ஜூலை.12 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# இந்தியா நியூசிலாந்து வர்த்தகத்தை 2030க்குள் ரூ.35,000 கோடியாக உயர்த்த இலக்கு

ஆக்லாந்து, ஜூலை.12-

இந்தியாவும் நியூசிலாந்தும் முக்கிய துறைகளில் நீண்ட காலத்துக்கு ஒன்றாக இணைந்து செயல்படுவது என்றும், 2030க்குள் இருதரப்பு வர்த்தகத்தை இரட்டிப்பாக்க, அதாவது ரூ.35,000 கோடியாக உயர்த்துவது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நேற்று (ஜூலை 10) நியூசிலாந்து சென்றடைந்தார். அங்கு அவரை அந்நாட்டுப் பிரதமர் கிறிஸ்டோபர் லகசன் விமான நிலையத்துக்கே வந்து ஆரத்தழுவி வரவேற்றார்.

பிரதமர் நரேந்திர மோடியும் பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனும் தங்கள் தூதுக்குழுவினருடன் இணைந்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். இதில், பல்வேறு முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்த பேச்சுவார்த்தையின்போது பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இந்தியாவும் நியூசிலாந்தும் முக்கிய துறைகளில் நீண்ட காலத்துக்கு ஒன்றாக இணைந்து செயல்படுவது என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2030க்குள் இருதரப்பு வர்த்தகத்தை இரட்டிப்பாக்குவது, அதாவது ரூ.35,000 கோடியாக உயர்த்துவது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக ஐந்து ஆண்டு கால திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், ‘இந்தோ பசிபிக் பிராந்தியம் குறித்து இரு தலைவர்களும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். சுதந்திரமான, திறந்த, வளமான பிராந்தியத்தை உருவாக்குவதில் இணைந்து



செயல்பட இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு, விதிகளின் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்குமுறை ஆகியவற்றை பாதுகாப்பதன் முக்கியத் துவத்தை தலைவர்கள் வலியுறுத்தினர். குறிப்பாக 1982 ம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபையின் கடல்சார் சட்ட ஒப்பந்தத்தின்படி, கடற்பயணம் மற்றும் வான்வழிப் பயணத்தில் சுதந்திரத்தையும், கடலின் பிற சட்டப்பூர்வ பயன்பாடுகளையும் உறுதி செய்ய வேண்டும் என்று இரு பிரதமர்களும் அழைப்பு விடுத்தனர்.

சமச்சீரான, விரிவான, பரஸ்பர நன்மை பயக்கும் இந்தியா நியூசிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு கையெழுத்திடப் பட்டுள்ளதை இரு தலைவர்களும் வரவேற்றனர். இந்த ஒப்பந்தம் விரைவில் நடைமுறைக்கு வருவதையும், திறம்பட செயல்படுத்தப் படுவதையும் உறுதி செய்ய இணைந்து செயல்பட அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல் குறித்து விவாதித்த பிரதமர் மோடி, பிரதமர் லக்சன் ஆகியோர், அங்கு மீண்டும் அதிகரித்துள்ள பதற்றம் குறித்து கவலை தெரிவித்தனர். அனைத்துத் தரப்பினரும் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும், பதற்றத்தைத் தணிக்கவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். கப்பல் போக்குவரத்து மீதான கட்டுப்பாடுகளை எதிர்த்த அவர்கள், ஹார்முஸ் ஜலசந்தி வழிக கப்பல் போக்குவரத்து முழுமையாக மீட்டெடுக்கப் பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

மோத லுக்கு அமைதியான, நிரந்த ரமான தீர்வை எட்ட பேச்சு வார்த்தை, ராஜ தந்திரம், சர்வதேச சட்டங்களை கடைப் பிடித்தல் ஆகியவற்றின் முக்கியத் துவத்தை இரு தலைவர்களும் வலியுறுத்தினர். ஐக்கிய நாடுகள் சபையின் துணிச்சலான, பயனுள்ள சீர்திருத்தங்களை மேற்கொள்ள வலியுறுத் திய அவர்கள், பாதுகாப்பு சபையை விரிவுபடுத்துவதற்கான தங்கள் ஆதரவை உறுதிப்படுத்தினர்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “முதல் ‘எம்.எல்.ஏ. களவாணி’ முதல்வர் விஜய்தான்” தினகரன் சரமாரி தாக்கு

மதுரை, ஜூலை.12-

“திமுக அதிமுக கூட்டுக் களவாணி என முதல்வர் விஜய் கூறுகிறார். ஆனால், அவர்தான் ஒவ்வொரு கட்சிகளிலும் உள்ள எம்எல்ஏக்களை திருடி வருகிறார். முதல் ‘எம்எல்ஏ களவாணியே விஜய்தான்’’ என அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் விமர்சித்துள்ளார்.

மதுரை இன்று அவர் செய்தியாளர்களிடம் கூறியது: “நாங்கள் அதிமுகவுடன் இணைந்துதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். கரூர் சம்பவத்தில் காவல் துறை தவறாக வழிநடத்தியதாகக் கூறும் முதல்வர் விஜய், அந்த துறையை அவர்தான் வைத்துள்ளார். அந்த துறையினர் மீது என்ன நடிவடிக்கை எடுத்துள்ளார்?

விஜய் கூறுவதெல்லாம் உண்மையா என்பது குறித்து சிபிஐ விசாரணை சென்றுகொண்டிருக்கிறது. ஆனால் பழியை யார் மீதும் சொல்வது சரியாக இருக்காது. கரூர் துயர சம்பவத்துக்கு காரணமானவர்கள் யார் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்.

கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அரசுப் பணி வழங்கி, தவறான முன்னுதாரணத்தை செய்து கொண்டிருக்கிறது தவெக. இன்னும் அவர் சினிமா ஷூட்டிங் போன்றே நினைத்துக் கொண்டிருக்கிறார். அரசியலை விட்டு தமிழக மக்கள் யாரை வெளியேற்றுவார்களோ அவர்களை வெளியேற்றுவார்கள்.

தமிழகத்தில் வேலைவாய்ப்பை பெருக்குவதற்கு, வளர்ச்சித் திட்டங்களை கொண்டுவர வேண்டும். அடிப்படை வசதிகளை தொடர்ந்து மேம்படுத்த வேண்டும். அதைவிட்டு, மேடைகளில் ஏறி மற்றவர்களைப் பற்றி தவறாகப் பேசக் கூடாது, விவசாய கடனை ரத்து செய்யச் சொல்லி எந்த விவசாயியும் கேட்கவில்லை, ஆட்சிக்கு வந்த உடனே கடனை ரத்து செய்வேன் என்று கூறியது ஏமாற்று வேலை.

இதற்காக போராடிய ஒரு விவசாயிகூட இறந்துவிட்டார். அவருடைய வீட்டில் யாருக்காவது வேலைவாய்ப்பு கொடுத்தால், அதை எல்லாரும் பாராட்டுவார்கள்.

திமுக, அதிமுக கூட்டுக் களவாணி என முதல்வர் விஜய் கூறுகிறார். ஆனால், அவர்தான் ஒவ்வொரு கட்சிகளிலும் உள்ள எம்எல்ஏக்களை திருடி வருகிறார். அவர்தான் முதல் எம்எல்ஏ களவாணி.

அதிமுகவில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் கொண்டு வருவது எப்படி என்பது எங்களுக்குத் தெரியும். அவர் ரீல் விடுவதை நிறுத்திவிட்டு ரியல் ஆட்சியை நடத்த வேண்டும்.

அதிமுகவும், திமுகவும் கூட்டு சேரக்கூடிய சூழலை நாம் கணிக்க முடியாது. அரசியல் சூழல் யாரை வேண்டுமானாலும் மாற்றும். அதைத்தானே கடந்த காலத்தில் பார்த்திருக்கோம். அண்ணாவும், ராஜாஜியும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். இதுபோன்று பல உதாரணங்கள் உள்ளன. அதுபோல கூட்டணியை அரசியல் சூழ்நிலைதான் முடிவு செய்யும்.

முதல்வர் விஜய் தனது ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்ற பயத்தில், ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் செயல்படுகிறாரே தவிர, தமிழ்நாட்டு வளர்ச்சியில் அவருக்கு ஈடுபாடு இல்லை.

விஜயகாந்த் சினிமாவில் மட்டும்தான் நடித்தார். வெளியில் நடிக்கவில்லை. எனவே, முதல்வர் விஜய்யை விஜயகாந்துடன் ஒப்பிட வேண்டாம்’’ என்று தினகரன் கூறினார்.



■ மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டிகே.பிரபு அவர்கள், சிவகங்கை மாவட்டம், குன்றக்குடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைந்துள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் மணிமண்டபத்தில்,தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் 102வது பிறந்த நாள் அரசு விழாவினை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ்,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சீனிவாச சேதுபதி (திருப்பத்தூர்)அவர்கள்,திரு.இளங்கோவன் (மானாமதுரை) அவர்கள் குன்றக்குடி ஆதினம் தவத்திரு குன்றக்குடிபொன்னம்பல அடிகளார் அவர்கள், ஆகியோர் முன்னிலையில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.ஜெகவீரபாண்டியன், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## “போர்களை ஏஐ உதவியோடு நடத்தலாம்; திறமையான ராணுவத்தால் மட்டுமே வெற்றி கிட்டும்”; ராஜ்நாத் சிங்

விசாகப்பட்டினம், ஜூலை.12-

“எதிர்காலப் போர்கள் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு நடத்தப்படலாம். ஆனால், அவை நாட்டின் மனவுறுதி, பயிற்சி பெற்ற வீரர்கள், ராணுவ சக்தி ஆகியவற்றாலேயே வெல்லப்படும்’’ என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற, உள்நாட்டில் தயாரிக்கப் பட்ட ஐஎன்எஸ் மகேந்திரகிரி போர்க்கப்பலை கிழக்கு கட ற்படையுடன் இணைக்கும் விழாவில் உரையாற்றிய ராஜ்நாத் சிங், இந்த நிகழ்ச்சி, “இந்தியாவின் கடல்சார் சக்தியையும் உள்நாட்டு பாதுகாப்புத் திறனையும் வலுப்படுத்துவதில் மற்றொரு மைல்கல். சுமார் ஒன்றரை ஆண்டுகளில் ஆறு முன்னணி போர்க் கப்பல்கள் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளன. இது நாட்டின் விரிவடைந்து வரும் கப்பல் கட்டும் திறன், வேகமாக வளர்ந்து வரும் பாதுகாப்புத் தொழில் சூழல், உள்நாட்டு உற்பத்தியில் அதிகரித்து வரும் நம்பிக்கை ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

நாட்டின் பாதுகாப்பு, இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நிலையில் இருந்து, தனது சொந்த மக்களின் திறன்கள்



மற்றும் புதுமைகளின் மூலம் மேம்பட்ட ராணுவ தளங்களை உற்பத்தி செய்யும் நிலைக்கு இந்தியா முன்னேறியுள்ளது. ஐஎன்எஸ் மகேந்திரகிரியின் 75%க்கும் அதிகமான பாகங்கள் உள்நாட்டு பொருட்களைக் கொண்டே கட்டப்பட்டுள்ளன.

பிரம்மோஸ் சூப்பர் சோனிக் குரூஸ் ஏவுகணைகள், மேம்பட்ட பல்நோக்கு ரேடார், ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு அமைப்புகள், மின்னணு போர் அமைப்புகள், நவீன உள்நாட்டு ஆயுத தளவாடங்கள் ஆகியவற்றைக்கொண்ட மிகவும் திறன் வாய்ந்த ஓர் ஆழ்கடல் தளமாக இந்த போர்க்கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வான், கடல் மேற்பரப்பு, கடலுக்கு அடியில் என மூன்று வழிகளில் ஏற்படும் அச்சுறுத்தல்களையும் சமாளிக்கும் திறன் இந்த போர்க்கப்பலுக்கு உள்ளது. இது இந்திய பெருங்கடல் பிராந்தியம் முழுவதும் நாட்டின் கடல்சார் பாதுகாப்பை கணிசமாக வலுப்படுத்தும்.

எதிர்காலப் போர்கள் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு நடத்தப்படலாம். ஆனால், அவை தேசத்தின் மனவுறுதி, பயிற்சி பெற்ற ராணுவ வீரர்கள், திறமையான ராணுவ சக்தி ஆகியற்றால்தான் வெல்லப்படும். எனவே, தொழில்நுட்பங்களும் வழக்கமான தளங்களும் ஒன்றுக் கொன்று முரண் பட்டவை அல்ல. மாறாக, அவை ஒன்றுக் கொன்று துணை புரிகின்றன. ஒன்றை ஒன்று முழுமையாக்குகின்றன. வழக்கமான தளங்கள் இல்லாமல், புதிய தொழில்நுட்பங்கள் முழுமை பெறாது.

இன்றைய உலகில் கடல்சார் பாதுகாப்பும் பொருளாதார பாதுகாப்பும் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளன. இயற்கை பேரிடர்கள், மனிதாபிமான உதவிகள், பேரிடர் நிவாரணப் பணிகள், கடற்கொள்ளை எதிர்ப்புப் பணிகள், மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் இந்திய கடற்படை தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. சமீபத்திய மேற்காசிய மோதலின்போது எரிசக்தி சரக்குகளை ஏற்றிச்செல்லும் வர்த்தக கப்பல்கள் பாதுகாப்பாக செல்வதை உறுதி செய்வதிலும் கடற்படை பங்கு வகித்துள்ளது.

இந்தியாவின் கடல்சார் சக்தியின் மிக வலிமையான தூண்களில் ஒன்றாக விசாகப்பட்டினம் உள்ளது. ஆந்திரப் பிரதேசம் பாதுகாப்பு மற்றும் விண்வெளி உற்பத்திக்கான ஒரு முக்கிய மையமாக வளர்ந்து வருகிறது. கடல்சார் இந்தியா 2030 தொலைநோக்குப் பார்வையின் கீழ் அரசாங்கம், கப்பல் கட்டும் திறனை விரிவுபடுத்தி வருகிறது. கடல்சார் துறையை நவீனமயமாக்கி வருகிறது. ஒவ்வொரு உள்நாட்டு போர்க்கப்பலும் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தொழில்நுட்ப புத்தாக்கத்தை ஊக்குவித்து, தற்சார்பு இந்தியா இலக்கை முன்னெடுத்துச் செல்கின்றன. அதோடு, நாட்டின் தொழில்நுட்பத் திறன், தொழில்துறைச் சூழல், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றையும் வலுப்படுத்துகின்றன.

அடுத்த தலைமுறை பாதுகாப்பு தொழில் நுட்பங்களை மேம்படுத்துவதிலும், வலிமையான தன்னிறைவு பெற்ற, உலக அளவில் போட்டியிடக்கூடிய இந்தியாவை உருவாக்குவதிலும் நாட்டின் இளைஞர்கள் பங்களிக்க வேண்டும். புத்தொழில் நிறுவனங்கள், புதுமையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறையினரும் ஆகியோருக்கும் இதில் முக்கிய பங்கு இருக்கிறது.’’ என தெரிவித்தார்.

## உதயநிதி ஸ்டாலின் லண்டன் பயணம்

மீனம்பாக்கம், ஜூலை.12-

எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் இன்று காலை லண்டன் புறப்பட்டு சென்றார். தமிழக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், சென்னையில் இருந்து இன்று காலை 10 மணியளவில் எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் துபாய் வழியாக லண்டனுக்கு புறப்பட்டு சென்றார். அங்கு அவர் ஒரு வாரம் தங்கியிருப்பார் என்று கூறப்படுகிறது. லண்டனில் உள்ள பிரபல பல்கலைக் கழகத்தில் உதயநிதி ஸ்டாலினின் மகன் இன்பநிதி உயர்படித்து வந்தார். இதன் பட்டமளிப்பு



விழா, வரும் திங்களன்று லண்டனில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுவதாக கூறப்படுகிறது. இந்த விழாவில் தனது மனைவி கிருத்திகாவுடன் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொள்கிறார். அங்கு சில நாட்கள் தங்கியிருக்கும் உதயநிதி, வரும் 18ம் தேதி சென்னை திரும்புவார் என்றும் கூறப்படுகிறது.

முன்னதாக, இப்பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்காக, கடந்த 4ம் தேதியே திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், தனது மனைவி துர்காவுடன் லண்டனுக்கு சென்று விட்டார். இந்த விழாவில், உயர்கல்வி பட்டம் பெறும் பேரன் இன்பநிதியை மு.க.ஸ்டாலின் பாராட்டி வாழ்த்துகிறார். பின்னர், லண்டன் பயணத்தை நிறைவு செய்துவிட்டு, வரும் 18ம் தேதி மு.க.ஸ்டாலின் குடும்பத்தினர் எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் துபாய் வழியாக சென்னைக்கு திரும்புவார்கள் என்று கூறப்படுகிறது.

மாலை தந்தி

ஞாயிற்றுக்கிழமை 12.07.2026

# கம்பம் வட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகளை கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



கம்பம், ஜூலை.12-

தேனி மாவட்டம், கம்பம் வட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகளை கம்பம் சட்டமன்ற உறுப்பினர் .பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர்மரு. இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா .வைத்திநாதன்,மற்றும் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா அவர்கள் ஆகியோர் கம்பம் நகராட்சிப் பகுதியில் உள்ள சேனை ஓடை கால்வாயினை பார்வையிட்டு, சீரமைக்கத் தேவையான முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார். பின்னர் நகராட்சிப் பகுதியில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். அதனைத்தொடர்ந்துகம்பம் நகராட்சியில் உள்ள வீரநாயக்கன்குளம் மற்றும் அப்பகுதியினை சுற்றியுள்ள வரத்து கால்வாய்கள் சீரமைக்காமல், மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி குடியிருப்பு பகுதிகளுக்கு வருவதால் அதனை சீரமைக்க பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கையையொட்டி, அப்பகுதிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் நேரில் சென்று குளத்தை பார்வையிட்டு சீரமைப்பதற்கான திட்டங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டதுடன், வீரநாயக்கன்குளம் மற்றும் அதனை சுற்றியுள்ள வரத்து கால்வாய்களை, பெரியாறுவைகை வடிநில கோட்டம் மூலம் சீரமைக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, ஆனைமலையான்பட்டி ஊராட்சியில் உள்ள திராட்சை ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்று அதன் செயல்பாட்டுப் பணிகள் குறித்து ஆய்வு செய்ததுடன், உட்கட்டமைப்புகளை மேம்படுத்த அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். பின் னர்,ராமசாமிநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள தாமரைக்குளம் முட்புதர்களாக மரம், செடி, கொடிகளுடன் பயன்பாடின்றி இருப்பதாக பொதுமக்கள் கோரிக்கை வைத்ததையொட்டி, தாமரைக்குளத்தை பார்வையிட்டு ஊரக வளர்ச்சித்துறை மூலம் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார்.இந்த ஆய்வில், வருவாய் கோட்டாட்சியர் (உத்தமபாளையம்) .சையது முகைதீன் இப்ராஹிம், உதவி செயற்பொறியாளர் (பெரியாறுவைகை வடிநிலக்கோ ட்டம்) மல்லிகா, ஆணையாளர் (கம்பம்) உமாசங்கர், வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம், வட்டார வளர்ச்சி அலுவலர் (உத்தமபாளையம்) மைதிலி உட்பட அரசு அலுவலர்கள் பலர் இருந்தனர்.

# 53 ஆண்டுகள் பழமையான கன்னார்தெரு தபால் நிலையத்தை திறக்கக் கோரி பொதுமக்கள் போராட்டம்

## தலைமை தபால் நிலையத்திற்குள் நுழைந்து அதிகாரிகளிடம் சரமாரி கேள்வி -பரபரப்பு




மானாமதுரை, ஜூலை.12-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள கன்னார்தெரு தபால் நிலையத்தை மீண்டும் திறக்க வலியுறுத்தி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சனிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். தபால் நிலையம் மீண்டும் செயல்படத் தொடங்கும் வரை போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் அறிவித்தனர். கடந்த 53 ஆண்டுகளாக கன்னார்தெரு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த 2,500க்கும் மேற்பட்ட மக்களுக்கு சேவை வழங்கி வந்த தபால் நிலையம் தற்போது செயல்படாமல் இருப்பதால், அப்பகுதி மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.குறிப்பாக முதியோர் ஓய்வூதியதாரர்கள், சிறுசேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள், மாணவர்கள் மற்றும் வணிகர்கள் அன்றாட தேவைகளுக்காக நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தலைமை தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், “தபால் நிலையத்தை உடனடியாக திறக்க வேண்டும்”, “பொதுமக்களின் அடிப்படை சேவையை பறிக்காதீர்கள்” என முழக்கமிட்டனர்.இதனைத் தொடர்ந்து, சிலர் திடீரென தலைமை தபால் நிலையத்திற்குள் நுழைந்து அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டு வலியுறுத்தியதால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.பின்னர் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய தபால் துறை அதிகாரிகள், பொதுமக்களின் கோரிக்கையை உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர்.

எனினும், கன்னார்தெரு தபால் நிலையம் மீண்டும் திறக்கப்படும் வரை போரா ட்டம் தொடரும் என்றும், கோரிக்கை நிறைவேறாவிட்டால் அடுத்தகட்டமாக உண்ணாவிரதம் மற்றும் சாலை மறியல் உள்ளிட்ட தீவிர போராட்டங்களில் ஈடுபடப்படும் என்றும் பொதுமக்கள் எச்சரித்தனர்.




■ நீலகிரி மாவட்டம் உதகையில் மேரா யுவபாரத் சார்பில் , டாக்டர் சியாம் பிரசாத் பிறந்தநாளில் நினைவு கூறும் நிகழ்வு , உதகை யூனிக் பள்ளியில் நடைபெற்றது டாக்டர் சியாம் பிரசாத் வாழ்க்கை வரலாற்றை நினைவு கூறும் குறு நாடகம், தேசப்பற்றை வெளிப்படுத்தும் நடனம், முதலிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பள்ளியின் முதல்வர் காயத்ரி நிகழ்வினை தலைமையேற்று நடத்தினார் , சிறப்பு விருந்தினர்களாக நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் தலைவர் சுரேஷ் ரமணா, ஃபியூச்சர் இந்தியா அமைப்பின் பொறுப்பாளர் பாலச்சந்தர் , நீலகிரி கல்வி அறக்கட்டளை ஜாபர் கலந்து கொண்டனர் , நிகழ்விற்கான ஏற்பாடுகளை மேரா யுவபாரத் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரஞ்சித் செய்திருந்தார்



# டாஸ்மாக் ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் வழங்கக் கோரி கிருஷ்ணகிரியில் ஆர்ப்பாட்டம் - கடைகள் திறக்கப்படவில்லை

கிருஷ்ணகிரி, ஜூலை.12-

கிருஷ்ணகிரி மாவட்ட அனைத்து தொழிற்சங்க கூட்டுக்குழு சார்பில், டாஸ்மாக் மேலாளர் அலுவலகம் முன்பு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், வார விடுமுறை, மருத்துவ விடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத் தப்பட்டன.பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தொழிற்சங்க நிர்வாகிகள், 23 ஆண்டுகளாக தற்காலிகமாக பணியாற்றும் டாஸ்மாக் ஊழியர் களுக்கு அரசு அளித்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும், ஊழியர்கள் கடும் மனஉளைச்சலுக்கு ஆளாகி வருவதாகவும் குற்றம்சாட்டினர்.மேலும், கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் நேற்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் டாஸ்மாக் கடைகள் திறக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.




# பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கு அரிய வாய்ப்பு

தேனி, ஜூலை.12-

தேனி மாவட்டம் பிறப்புப் பதிவு குழந்தையின் முதல் உரிமை. பிறப்புச் சான்றிதழ் குழந்தையின் சட்டப்பூர்வ வயது குறித்த ஆதாரம், குடியுரிமைக்கான ஆதாரம் ஆகும். குழந்தையின் பெயருடன் கூடிய பிறப்புச் சான்றுதான் முழுமை பெற்ற சான்றிதழ் ஆகும்.

குழந்தையை பள்ளியில் சேர்க்க, வாக்காளர் அடையாள அட்டை பெற,ஓட்டுநர் உரிமம்பெற, அரசுப் பணிகளில் சேர, கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்க குழந்தையின் பெயருடன் கூடிய பிறப்புச்சான்று இன்றியமையாத ஆவணமாகும்.ஒரு குழந்தையின் பிறப்பு பெயரின்றி பதிவு செய்யப்பட்டிருந்தால் அப்பிறப்பு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 12 மாத காலத்திற்குள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் எழுத்து வடிவிலான உறுதிமொழியை சம்பந்தப்பட்ட பிறப்பு (ம) இறப்பு பதிவாளரிடம் சமர்ப்பித்து குழந்தையின் பெயரினை தாமத கட்டணமின்றி பதிவுசெய்து கொள்ளலாம்.12 மாதங்களுக்கு பின் குழந்தையின் பெயரினை 15 வருடத்திற்குள் காலதாமத கட்டணம் ரூ.200 செலுத்தி, உரிய அலுவலரின் அனுமதி பெற்று பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு 15 வருடத்திற்கு மேற்பட்ட மற்றும் 2011ஆம் ஆண்டுக்கு முன்னர் எப்போது பிறந்திருந்தாலும் குழந்தையின் பெயர் பதிவு செய்யப்படாத பிறப்புகளுக்கு வரும் 26.09.2026 வரை பெயர் பதிவு செய்திட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.குழந்தையின் பெயரினை இதுவரை பிறப்புச் சான்றிதழில் பதிவு செய்யாதோர் பிறப்பு பதிவு செய்யப்பட்ட நகராட்சி அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், பேரூராட்சி அலுவலகம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள பிறப்பு (ம) இறப்பு பதிவாளர் அலுவலகங்களில் விண்ணப்பித்து குழந்தையின் பெயரினை பதிவுசெய்து கொள்ளலாம். பிறப்புச் சான்றில் குழந்தையின் பெயரினை ஒருமுறை பதிவு செய்த பின்னர் எக்காரணம் கொண்டும் பெயரினை மாற்றம் செய்ய இயலாது. எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த அறிய வாய்ப்பினை பயன்படுத்தி 26.09.2026க்குள் குழந்தையின் பெயரினை பிறப்புச் சான்றில் பதிவுசெய்து பயன்பெறுமாறு மாவட்ட பிறப்பு (ம) இறப்பு பதிவாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.



■ திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி பேரூராட்சி வார்டு நம்பர் 7 பேரூராட்சி சொந்தமான இடத்தில் 200 மரக்கன்றுகள் நடப்பட்டன. செயல் அலுவலர் ரவிசங்கர் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராகமாவட்ட ஊராட்சி குழு தலைவரும் ( மாவட்ட சேர்மன் ) நாட்டறம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக செயலாருமான என்.கே.ஆர்.சூரியகுமார் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நடவு செய்து சிறப்பித்தார். உடன் நாட்றம்பள்ளி பேரூராட்சி அரசு ஊழியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# முருகனுக்கு மொட்டை போட்ட அரசு!” – ₹110 கோடி பழனி கோயில் நிலம் முறைகேடாகப் பதிவு: ராம ரவிக்குமார் அதிரடி குற்றச்சாட்டு!



திண்டுக்கல், ஜூலை.12-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்தை தனி நபர்கள் மோசடியாக பத்திரப்பதிவு செய்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன... தொடர்ந்து திருப்புகழ் சுவாமிகள் முருகதாஸ் சுவாமிகள் மற்றும் தண்டபாணி சுவாமிகள் அறக்கட்டளை ஆகியோர்களுக்கு சொந்தமான திருஆவணன்குடி அருகே உள்ள ஒரு ஏக்கர் 40 சென்ட் நிலத்தை திருக்கோயில் தர்ம காரியங்களுக்காக எழுதி வைத்தனர்.. இதன் மதிப்பு 110 கோடி ஆகும். இந்த சொத்தை திருக்கோயில் நிர்வாகம் சுத்தம் செய்து திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கார் பார்க்கிங் வசதி செய்யப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன.. இந்நிலையில் கீழ்க்கண்ட சொத்தை மேற்படி தனிநபர்களான வெள்ளத்துரை சேதுபதி ஆகிய இருவரும் பத்திரப்பதிவு துறை அதிகாரிகளை கையில் வைத்துக் கொண்டு அவசர அவசரமாக சொத்து மதிப்பை குறைத்து காட்டி தங்கள் பெயர்களில் பத்திரப்பதிவு இணை சார் பதிவாளர் மூலம் பதிவு செய்துள்ளனர்.. இதனை தொடர்ந்து தர்ம காரியங்களுக்காக திருக்கோவிலுக்கு எழுதி வைத்த சொத்தை முறைகேடாக ஆவணம் தயாரித்து சட்டவிரோதமாக ஆவண பதிவு செய்த வெள்ளத்துரை மற்றும் சேதுபதி ஆகிய இருவர்கள் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு உதவிய பத்திரப்பதிவுத்துறை அதிகாரிகள் அனைவரையும் துறை ரீதியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.தொடர்ந்து திருக்கோயில் அதிகாரிகள் தர்ம காரியங்களுக்காக வழங்கப்பட்ட இடத்தை பராமரிப்பு செய்து பக்தர்களின் பயன்பாட்டுக்கு முழுமையாக கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தி இந்து தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராம ரவிக்குமார் அதிரடிபேட்டி அளித்துள்ளார்.. தொடர்ந்து இந்நிகழ்வில் மாநில பொது செயலாளர் மனோஜ் குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்...

# தேனி மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.124. 85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு



பெரியகுளம், ஜூலை.12-

தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் , பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பொம்மிநாயக்கன்பட்டி ஊராட்சியில் ரூ.13.30 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு வருவதைபார்வையிட்டு, பணிகளைவிரைந்துமுடிக்குமாறு அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத் தினார். தொடர்ந்து, சில்வார்பட்டி ஊராட்சியில் ரூ.31.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடம், அதே பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு கூடுதல் வகுப்பறைக் கட்டிடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத்தொடர்ந்து டி.வாடிபட்டி ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், ரூ.5.80 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளி கட்டிடத்தின் வடக்கு நோக்கிய முகப்புப்பகுதி மற்றும் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் தெற்கு நோக்கிய முகப்புப்பகுதியில் பராமரிப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், எண்டப்புளி ஊராட்சியில் ரூ.17.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகஅங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு, பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் விரைந்து முடிக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

பின்னர், ஜல்லிப்பட்டி ஊராட்சியில் ரூ.11.60 இலட்சம் மதிப்பீட்டிலும், வடபுதுப்பட்டி ஊராட்சியில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டிலும் நாற்றங்கால் பண்ணை அமைக்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் .ஜெகதீசன், புவனேஷ்வரி,உதவிபொறியாளர் அஜய்குமார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

மாலை தந்தி
ஞாயிற்றுக்கிழமை 12.07.2026

# ஏழைகளின் ஊட்டி ஏலகிரியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் வலியுறுத்தல்

ஜோலார்பேட்டை, ஜூலை.12-

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை அருகே அமைந்துள்ள புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான ஏலகிரி மலை, ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகிறது. அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும் என ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் சார்பாக வேண்டுகோள் வைக்கின்றனர்.மேலும் ஏலகிரி மலையில் அமைந்துள்ள ஏ ஆர் தங்கக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்வில் ஹோட்டல் உரிமையாளர்கள் கூறுகையில்இயற்கை எழில் நிறைந்த இந்த மலைப்பகுதியில் 200க்கும் மேற்பட்ட ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் மற்றும் பொழுதுபோக்கு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.மேலும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் ஏலகிரிக்கு வருகை தரும் நிலையில், இப்பகுதியில் அடிப்படை வசதிகளை தமிழக அரசு உடனடியாக மேம்படுத்த வேண்டும் என்று ஏலகிரி ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.குறிப்பாக, ஏலகிரிக்கு இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும், சென்னைரூ ஏலகிரி நேரடி பேருந்து சேவையை மீண்டும் தொடங்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். ஏற்கனவே இயக்கப்பட்டு வந்த இரண்டு சென்னைரூ ஏலகிரி பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகளும் பொதுமக்களும் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவித்தனர்.மேலும், ஏலகிரி மலையில் அவசர மருத்துவ சேவைக்காக கூடுதல் ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்த வேண்டும் என்றும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதிக்காக தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

அதேபோல், பெங்களூரு-சென்னை வந்தே பாரத் ரயில் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் நின்று செல்லும் வகையில் ரயில்வே அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதன் மூலம் ஏலகிரிக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தனர்.தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ சுற்றுலா வரைபடத்தில் ஏலகிரி மலையை முக்கிய சுற்றுலாத் தலமாக இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும் ஏழைகளின் ஊட்டி என அழைக்கப்படும் இந்த மலைப்பகுதிக்கு சாலை வசதிகளை மேலும் விரிவுபடுத்தி மேம்படுத்த வேண்டும் என்றும் ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினரும் பொதுமக்களும் வலியுறுத்தினர்



# பூவிருந்தவல்லி அருகே செவ்வாப்பேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் வேலம்மாள் வித்யாஷ்ரம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் "இன்விக்ட-2026" ஆண்டு விழா

திருவள்ளூர், ஜூலை.12-

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகிலுள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவில், பள்ளியின் தாளாளர் சுடலை முத்துப்பாண்டியன் மற்றும் பள்ளி முதல்வர் சதீஷ் சத்தியமூர்த்தி தலைமையேற்று நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் பிரகாசம் (குட்டி) ஆவடி சட்டமன்ற உறுப்பினர் ரமேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

ஆண்டு முழுவதும் நடைபெற்ற பல்வேறு தடகள மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்கள், கோப்பைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற மாணவர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் நேரில் பாராட்டி, கல்வியுடன் விளையாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என வாழ்த்துத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து, பள்ளி மாணவ, மாணவிகள் வழங்கிய வண்ணமயமான கலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. பரதநாட்டியம், யோகா, கராத்தே உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் மாணவர்கள் தங்களது திறமைகளை உற்சாகத்துடன் வெளிப்படுத்தினர். அவர்களின் ஒத்திகை, ஒழுக்கம் மற்றும் திறமையான நிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் பலத்த கைதட்டலை பெற்றன.நிகழ்ச்சியில் உரையாற்றிய பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் பிரகாசம் (குட்டி), மாணவர்கள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்தி, அவர்களின் வழிகாட்டுதலின்படி ஒழுக்கத்துடன் செயல்பட்டால் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்று அறிவுறுத்தினார். மேலும், கல்வியுடன் விளையாட்டு, ஒழுக்கம் மற்றும் நற்பண்புகளையும் மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். இவ்விளையாட்டு விழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மாணவர்களின் விளையாட்டுத் திறனையும் கலைத்திறனையும் வெளிப்படுத்திய "இன்விக்டஸ்ரூ 2026" விழா அனைவரின் பாராட்டையும் பெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றி கழகத்தின் ஒன்றிய செயலாளர் யுவராஜ் விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்







# கிருஷ்ணகிரியில்அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர் சங்கத்தின் சார்பில்கண்டன ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூலை.12-

கிருஷ்ணகிரியில் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாகள் சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு, அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர் சங்கத்தின் சார்பில், அங்கன்வாடி திட்டத்தை தனியார் மயமாக்குவதை கண்டித்து நேற்று மாலை நேர ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைலவர் தேவி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சுஜாதா, மாவட்ட பொருளாளர் மஞ்சு, மாநில செயற்குழு உறுப்பினர் மஞ்சுளா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிஐடியூ மாவட்ட செயலாளர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.ஆர்ப்பாட்டத்தில், அங்கன்வாடி திட்டத்தை தனியார் மயம் என்ற பெயரில் சீர் குலைக்க வேண்டாம். அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும். அங்கன்வாடி மற்றும் உதவியாளர்களுக்கு ஒய்வு பெறும் போது கடைசி மாத ஊதியத்தில் பாதியை அகவிலைப் படியுடன் கூடிய பென்ஷனாக வழங்க வேண்டும். உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி பணிக்கொடையாக அங்கன்வாடி ஊழியர்களுக்கு ரூ.10 லட்சமும், அங்கான்வாடி உதவியாளர்களுக்கு ரூ.5 லட்சமும் வழங்க வேண்டும். குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு எந்தவித நிபந்தனையும் இன்றி காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். 10 ஆண்டுகள் பணி முடித்த அங்கன்வாடி ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.



■ தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம்ஜல்லிப்பட்டி ஊராட்சியில் அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளியில் திடீர் ஆய்வு மேற்கொண்டபோது, அப்பள்ளியில் வகுப்பறை கட்டிடம், கைகழுவும் இடம் மற்றும் வராண்டா பகுதிகள் பழுதடைந்து காணப்பட்டதை கண்டறிந்து உடனடியாக சரிசெய்திட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்துவட்டார வளர்ச்சி அலுவலர் உடனடியாக மேற்குறிப்பிட்டப் பணிகளை சரிசெய்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மட்றப்பள்ளி கிராம நிர்வாக அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், இ.ஆ.ப., (10.07.2026) அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். உடன் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் உள்ளனர்.



# கிருஷ்ணகிரியில் 32வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி தொடக்கம்

கிருஷ்ணகிரி, ஜூலை.12-

கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில் நேற்று 32வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி தொடக்கவிழாவிற்கு மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ் குமார் திறந்து வைத்தார். எம்எல்ஏக்கள் முகுந்தன், இளையராஜா, எஸ்பி ஜி.எஸ்.அனிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து மா போட்டி அரங்கு உட்பட பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை திறந்து வைத்தும், 24 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 16 லட்சத்து 51 ஆயிரத்து 400 மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆட்சியர் பேசியதாவது: மாவட்டத்தில் ஆண்டிற்கு 33 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 2.75 டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 2.10 இலட்சம் மெட்ரிக் டன் பழங்கள் மாம்பழக்கூழ் உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. உலகத்திற்கே மாம்பழம் உற்பத்தியில் முன்னோடியாக கிருஷ்ணகிரி மாவட்டம் திகழ்கிறது. மா விவசாயத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் மாங்கனி கண்காட்சி நடைபெற்று வருகிறது. நிகழாண்டில் மாங்கனி கண்காட்சி பையர் செல்லர் மீட்டுக்காக பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட உள்ளது. இம்மாங்கனி கண்காட்சியில் ஒவ்வொரு நாளும் மாலை கலை நிகழ்சிகள் தொடங்கும் முன்பு மா விவசாயத்தில வந்து சிறப்பாக செய்யக்கூடிய மா விவசாயிகள் அவர்களுடைய அனுபவத்தை எடுத்துக் கூறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மாவட்டத்தில் 1,19,750 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் 51,060 ஹெக்டேர் பரப்பளவில் காய்கறி பயிர்களும், 34,650 ஹெக்டேர் பரப்பளவில் பழப்பயிர்களும், 16,580 ஹெக்டேர் பரப்பளவில் மலைப்பயிர்களும் மற்றும் 13,093 ஹெக்டேர் பரப்பளவில் மலர்களும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அரசு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இம்மாவட்டத்தில் 202526ம் ஆண்டில் மட்டும் ரூ.118.97 கோடி மதிப்பில் தேசிய மற்றும் மாநில திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, 1,03,420 விவசாயகள் பயன்பெற்றுள்ளனர். இதே போல் நிகழாண்டில், 202627ல் ரூ.80.12 கோடி மதிப்பில் சுமார் 8,158 விவசாயிகள் திட்டங்கள் பெற்று பயன்பெற உள்ளனர். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மா ரகங்களான அல்போன்சா, மல்கோவா, பங்கனப்பள்ளி ஆகியவை ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும், அல்போன்சா, பெங்களூரா மற்றும் நீலம் உள்ளிட்ட ரகங்கள் மாம்பழக்கூழ் மற்றும் இதர பயன்பாட்டிற்கு பயன்படுகிறது. மாவிற்கு விலை நிர்ணயம் செய்து மத்திய அரசிடம் பெற்று தர முதல்வர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இவ்வாறு ஆட்சியர் தெரிவித்தார்.இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஷேக் அயூப், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், திட்ட இயக்குநர் உமா மகேஸ்வரி, உதவி ஆட்சியர் (பயிற்சி) சாய்சைதன்யா ஜாதவ், வருவாய் கோட்டாட்சியர் திரு.நா.ஷாஜகான், இணை இயக்குநர்கள் (பொ) உமா (வேளாண்மைத்துறை), குணவதி (தோட்டக்கலைத்துறை), பிஆர்ஓ மோகன், தவெக மாவட்ட செயலாளர்கள் முரளிதரன், சுரேஷ், வடிவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.பாக்ஸ் செய்திக்காக170க்கும் ரக மாங்காய்கள்இக் கண்காட்சியில் மா போட்டி அரங்கில், தமிழகம் மற்றுமின்றி ஆந்திர, கர்நாடக, கேரளா மற்றும் வடமாநிலங்களில் விளைவிக்கப்பட்ட புனாசா, அமாராபலி, அமாரப்பள்ளி, வனராஜா, அல்போன்சா, தோத்தாபுரி, பங்கனப்பள்ளி, செந்தூரா, ஸ்வர்ணா, குருக்கன், அர்கா அன்மே, ரசல் உள்ளிட்ட 170க்கும் மேற்பட்ட மா ரகங்கள் 160 விவசாயிகள் காட்சிப்படுத்தியிருந்தனர். அத்துடன் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், பார்வையாளர்களை கவரும் வகையில் மலர்களால் ஏர்கலப்பையும், தேவதை வடிவமைத்து காட்சிப்படுத்தினர். மேலும், தோத்தாபுரி ரக மாங்காய்கள் மூலம் செல்பி பாயிண்ட் அமைக்கப்பட்டிருந்தது. தொடக்கவிழாவில், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்கும் வகையில் துணிப்பையில் மாங்காய்கள் வைத்து 300க்கும் மேற்பட்டவர்களுக்கு விநியோகம் செய்தனர். மேலும், முதல்வர், தொழில்துறை, வேளாண்மை துறை அமைச்சர்களின் படங்கள் பழங்களில் வரையப்பட்டிருந்தது.

# உதகை அரசு மருத்துவக் கல்லூரியில் துறைசார்ந்த நுகர்வோர் காலாண்டு கூட்டம் நோயாளிகள் நலனுக்கு ஆபா (ABHA) பதிவு அவசியம் மருத்துவக்கல்லூரி டீன் தகவல்

உதகை, ஜூலை.12-

உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் துறை சார்ந்த நுகர்வோர் காலாண்டு ஆலோசனைக் கூட்டம் மருத்துவக் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்றது.கூட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி டீன் சீனிவாசன் தலைமை தாங்கினார். குடிமை மருத்துவ அலுவலர் ரவிசங்கர் மற்றும் கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியம் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகளாக கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் செயலாளர் சிவசுப்பிரமணியம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித், புளுமவுண்டன் நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் வாசுதேவன், செயலாளர் முகமது சலீம், றிஸிளி முகமது இஸ்மாயில், கோத்தகிரி நுகர்வோர் பாதுகாப்பு சங்க செயலாளர் பாலகிருஷ்ணன், உதகை தொகுதி நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் அமீர்கான், நிர்வாகி இம்ரான் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வெளிநோயாளிகள் பிரிவில் கூடுதல் இருக்கை வசதிகளை ஏற்படுத்துதல், மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை தொடர்ந்து கண்காணித்தல், ஆபா (ABHA) அட்டை இல்லாததால் நோயாளிகள் அலைக்கழிக்கப்படுவதாக எழுந்துள்ள புகார்களுக்கு தீர்வு காணுதல், டயாலிசிஸ் பிரிவு நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவதில் ஏற்படும் சிரமங்களை உடனடியாக சரிசெய்தல், தூய்மையாக பராமரித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.இதற்கு பதிலளித்து மருத்துவக் கல்லூரி டீன் சீனிவாசன் பேசியதாவது:



"மருத்துவத் துறையில் தரமான சிகிச்சையை வழங்கவும், நோயாளிகளின் மருத்துவ வரலாற்றை எளிதாக அறிந்து சரியான நோய்க்கு சரியான சிகிச்சை அளிக்கவும் ஆபா (ABHA) மருத்துவ பயனாளர் அடையாள அட்டை பதிவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டம் ஐந்தாம் கட்டத்தில் இத்திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. அதற்கான முன்னேற்பாடாக தற்போது ஆபா பதிவு நடைபெற்று வருகிறது. ஆபா பதிவு செய்திருந்தால் இந்தியாவின் எந்த மாநிலத்திற்குச் சென்றாலும் நோயாளிகளின் மருத்துவ வரலாற்றை அறிந்து தேவையான சிகிச்சையை விரைவாக பெற முடியும். தற்போது ஆபா பதிவு செய்யாதவர்களுக்கும் வழக்கம்போல் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. டயாலிசிஸ் பிரிவில் சமீபத்தில் ஏற்பட்ட மின்தடையால் சிறிது நேரம் சிகிச்சையில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் உடனடியாக சீரமைத்து சிகிச்சை வழங்கப்பட்டது. இதுபோன்ற பாதிப்புகள் மீண்டும் ஏற்படாத வகையில் மருத்துவமனைக்கு தனி துணை மின் நிலையம் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது தினசரி சராசரியாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். 23 சிறப்பு மருத்துவத் துறைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் இருதயம் மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சைகள் சூப்பர் ஸ்பெஷாலிட்டி சேவையாக வழங்கப்பட்டு வருகின்றன. உதகை - கோவை இடையேயான நீண்ட தூரம் காரணமாக அவசர மருத்துவ சேவைகளில் சிரமம் ஏற்படுவதால் கூடுதலாக ஆறு சூப்பர் ஸ்பெஷாலிட்டி துறைகளை தொடங்க அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மருத்துவமனையில் உருவாகும் உயிரியல் மருத்துவக் கழிவுகளை (Bi-omedical Waste) அகற்ற ஆண்டுக்கு சுமார் ரூ.30 லட்சம் செலவாகிறது. பிற கழிவுகள் நகராட்சி மூலம் அகற்றப்படுகின்றன. மேலும்ஒரு நாளைக்கு சுமார் மூன்றாயிரத்துக்கு மேல் இரத்த பரிசோதனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் பன்னிரெண்டு லட்சத்து எண்பது ஆயிரம் பேருக்கு ரத்த பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. தைராய்டு பரிசோதனை மட்டும் வியாழன் கிழமைகளில் மேற்கொள்ளப்படுகிறது. நோயாளிகளின் ஒத்துழைப்பு கிடைத்தால் மேலும் சிறப்பான மருத்துவ சேவைகளை வழங்க முடியும்," என்றார். கூட்டத்தில் மருத்துவக் கல்லூரி நிர்வாக துறை அலுவலர்கள் சந்தோஷ், அபிலாஷ்குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் மாணவர் பாராளுமன்ற அமைச்சர்கள் பதவியேற்பு விழா!

காளையார்கோவில், ஜூலை.12-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம், சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 'மகிழ் முற்றம்' திட்டத்தின் கீழ், மாணவர் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற அமைச்சர்கள் மற்றும் அணித் தலைவர்களின் பதவியேற்பு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பள்ளியின் தலைமையாசிரியர் சுரேஷ் தலைமை தாங்கினார். ஆசிரியர் காளீஸ்வரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இதனைத் தொடர்ந்து, தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாணவர் அமைச்சர்கள் தனித்தனியாகப் பதவியேற்று, உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அதன்படி: கல்வி அமைச்சர்: ஜெர்லின் ஜாய் (குறிஞ்சி அணி) மாணவர் நலன் மற்றும் பாதுகாப்பு அமைச்சர்: அனன்யா (மருதம் அணி)



தகவல் மற்றும் தொடர்பு அமைச்சர்: தர்ஷினி ஸ்ரீ (பாலை அணி)சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை அமைச்சர்: பால்கரிஸ் ஜெருவின் (நெய்தல் அணி)சுகாதாரம் மற்றும் தூய்மை அமைச்சர்: ஆரோ ஆஷிதா (முல்லை அணி) ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். மேலும், குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் மற்றும் பாலை ஆகிய ஐந்து அணிகளின் தலைவர்களாக முறையே லிடிஸ்டினா, முகேஷ், மகதி, டார்வின் தாவீது மற்றும் அருள் ஜோஸ்வின் ஆகியோர் பதவியேற்றனர். ஒவ்வொரு அணிக்கும் வழிகாட்டிகளாகவும், ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களாகவும் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, தனபாக்கியம் மற்றும் பாரதி மலர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். பதவியேற்பு விழாவின் இறுதியில், அமைச்சர்கள் மற்றும் அணித் தலைவர்கள் அனைவரும் ஆசிரியர்களுடன் இணைந்து குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். விழாவிற்கான நிகழ்ச்சிகளை ஆசிரியர் சகாய செல்வி மிகச்சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். நிறைவாக, ஆசிரியர் முத்துக்குமார் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவுற்றது.

# சேம்பார் பள்ளி மேலாண்மை குழு கூட்டம்: புதிய வகுப்பறைகள் கட்ட தீர்மானம்

காளையார்கோவில், ஜூலை.12-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு (SMC) கூட்டம் நடைபெற்றது.பள்ளியின் தலைமையாசிரியர் சுரேஷ் தலைமை வகித்தார். மாவட்ட பள்ளி மேலாண்மை குழு பார்வையாளர் யோகேஸ்வரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தின் தொடக்கத்தில் உறுப்பினர்களுக்கான விழிப்புணர்வு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.பள்ளி மேலாண்மை குழுத் தலைவி டேவிட் அருள் ஷாலினி, கடந்த இரண்டு







ஆண்டுகளில் பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். தலைமையாசிரியர் சுரேஷ், பள்ளி மேலாண்மை குழுவின் மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள புதிய நிர்வாகிகள் தேர்வு குறித்தும் விளக்கமளித்தார். கூட்டத்தில், நடப்புக் கல்வியாண்டில் 100 சதவீத மாணவர் சேர்க்கை நிறைவேற்றப்பட்டதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. தமிழக அரசின் 'மணற்கேணி' செயலியை மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும் என்றும், பள்ளிக்கு மாணவர் நலன் கருதி புதிய மூன்று வகுப்பறைகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், ஜூலை 15ஆம் தேதி காமராஜர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக சிறப்பாகக் கொண்டாடவும், மண்டல அளவிலான போட்டிகளில் மாணவர்களை பங்கேற்கச் செய்யவும் முடிவு செய்யப்பட்டது. பள்ளியின் 'மகிழ் முற்றம்' மாணவர் நாடாளுமன்றத்தில் புதிதாகப் பதவியேற்ற மாணவத் தலைவர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு ம் வாழ்த் து தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், பாரதி மலர், தனபாக்கியம் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் ஆசிரியர் முருகன் நன்றி கூறினார்.

# ஆடு, மாடுகள் மேய்க்கும் போராட்டம் இன்று தீண்டாமையை ஒழிக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்த அறிவிப்பு

திருப்புவனம், ஜூலை.12-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள தீப்புவனத்தில், தீண்டாமையை ஒழிக்கவும், அரக்கச் சட்டமான இஸ்லி (ESA) சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், பொதுமக்களின் ஆடு, மாடுகளை மேய்க்க விடாமல் தடுக்கப்படுவதாக கூறப்படும் பிரச்சினைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் இன்று (ஜூலை 12) "ஆடு, மாடுகள் மேய்க்கும் போராட்டம்" நடைபெற உள்ளது.இந்தப் போராட்டத்திற்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI), அனைத்திந்திய




ஜனநாயக மாதர் சங்கம் (AIDWA), தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (AIKS) உள்ளிட்ட அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன. இன்று (12.07.2026) பிற்பகல் 3.00 மணி அளவில் அல்லி அரணி, தீப்புவனம் பகுதியில் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பொதுமக்கள் திரளாக பங்கேற்குமாறு அமைப்புகள் கேட்டுக்கொண்டுள்ளன.

# சிவகங்கை அருகே அடையாளம் தெரியாத ஆண் சடலம் மீட்பு!

சிவகங்கை, ஜூலை.12-

சிவகங்கை மாவட்டம், மேலக்கொன்னக்குளம் - சிவகங்கை ரயில் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், சுமார் 45 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்று (10.07.2026) இரவு மீட்கப்பட்டார். உயிரிழந்தவர் சுமார் 168 செ.மீ. உயரம், கருப்பு நிறம் கொண்டவர் என போலீசார் தெரிவித்துள்ளனர். அவர் அணிந்திருந்த உடை மற்றும் உடலில் இருந்த அடையாளங்களின் அடிப்படையில் அவரது விவரங்களை கண்டறியும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.இந்த சம்பவம் தொடர்பாக மானாமதுரை இருப்புப் பாதை (ரயில்வே) காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்த நபரின் அடையாளம் தெரிந்தவர்கள் அல்லது அவரது உறவினர்கள் மானாமதுரை ரயில்வே இருப்புப் பாதை காவல் நிலையத்தை தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்குமாறு போலீசார் கேட்டுக் கொண்டுள்ளனர்.





■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஜம்மணப்புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், இ.ஆ.ப., (10.07.2026) அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். மேலும் அங்குள்ள பொது மக்களிடையே நிறைகள் குறைகளைப் பற்றி கேட்டறிந்தார். உடன் மருத்துவர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்

# நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் TNPSC GROUP 1 இலவச பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

நீலகிரி, ஜூலை.12-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) தொகுதி1 (Group I) சேவைகளுக்கான அறிவிக்கைஎண்.05/2026 வெளியிடப்பட்டுள்ளது. இப்பணியிடங்களுக்கு பட்டப்படிப்பு கல்வித்தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு மற்றும் பிற தளர்வுகள் அரசாணைப்படி வழங்கப்படும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் TNPSC அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் 29.07.2026 அன்று வரை விண்ணப்பிக்கலாம். மேலும், இத்தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் நடத்தப்பட உள்ளது.

மேற்குறிப்பிட்ட பணியிடத்திற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக நீலகிரி மாவட்டத்தில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் பயிற்சி மையத்திலும், பந்தலூரில் செயல்படும் TEWS மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் செயல்படும் பயிற்சி மையத்திலும் நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி வகுப்புகளில் கலந்துக்கொள்ள விருப்பமுள்ள ஆர்வலர்கள், இப்பணியிடத்திற்கு விண்ணப்பித்ததற்கான ஆவணங்களுடன், இவ்வலுவலகத்திற்கு நேரில் வருகை புரிந்தோ அல்லது 04232444004 என்ற தொலைபேசி எண்ணில் அல்லது 7200019666 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டோ முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். இத்தேர்விற்கு விண்ணப்பித்த ஆர்வலர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் ஜூலை 15 வரை வெப்பநிலை 5 டிகிரி உயர வாய்ப்பு

சென்னை, ஜூலை.12-

தமிழகத்தில் நாளை முதல் 15ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயர வாய்ப்புள்ளது.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகக் கடலோரப் பகுதிகளில் சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நாளை (ஜூலை 12) மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.13 முதல் 16ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 17ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 15ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 80 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டியும் இருக்கக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, கடலூர் மாவட்டம குப்பநத்தத்தில் தலா 7 செமீ, மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடில் 6 செமீ, அரியலூர் மாவட்டம் செந்துறை, திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி, விழுப்புரம் மாவட்டம் செம்மேடு, அவலூர்பேட்டை, கோவை மாவட்டம் உபாசி, சோலையார், கடலூர் மாவட்டம் விருதாச்சலம், நீலகிரி மாவட்டம் நடுவட்டம், நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் ஆகிய இடங்களில் தலா 5 செமீ மழை பதிவாகியுள்ளது.

# வன்னியர் இட ஒதுக்கீட்டு போராட்டத்தில் சுட்டு கொல்லப்பட்ட வாரிசுகளுக்கு அரசு வேலை வழங்க வேண்டும்

## அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.12-

பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கை: கரூரில் விஜய் பங்கேற்ற பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். அவர்களின் குடும்பங்களுக்கு உதவும் வகையில், 31 பேருக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் உள்ளிட்ட அரசு பணிகளுக்கான ஆணையை கரூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் விஜய் வழங்கினார். மேலும் ஒரு குடும்பத்தை சேர்ந்தவருக்கு ரூ.10 லட்சம் கருணைத் தொகையையும் வழங்கியுள்ளார். கருணையை மட்டும் அளவீடாக கொண்டும் பார்க்கும் போது இந்த நடவடிக்கைகள் மிகவும் தேவையானவை என்பது தான் எங்களது நிலைப்பாடு.



இத்தகைய உதவிகள் வழங்கப்பட வேண்டிய பல்வேறு நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டவர்கள் இருந்தாலும் கூட, அவர்களில் முதன்மையானவர்கள், வன்னியர்களுக்கு 20 சதவீதம் தனி இட ஒதுக்கீடு, அனைத்து சமூகங்களுக்கும் அவரவர் மக்கள்தொகைக்கு இணையான இட ஒதுக்கீடு, பட்டியலின மக்களுக்கான இட ஒதுக்கீட்டின் அளவை 22 சதவீதம் ஆக உயர்த்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 1987ம் ஆண்டு காவல்துறை நடத்திய கொடூரமான துப்பாக்கிச் சூட்டிலும், பிற அடக்குமுறைகளிலும் கொல்லப்பட்ட 21 பேர் உள்ளிட்ட 25 பேரின் குடும்பங்களை சேர்ந்தவர்கள்தான்.41 பேர் உயிரிழந்ததற்கு அரசின் தவறு காரணமல்ல. ஆனாலும் அரசு வேலை உள்ளிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதை விமர்சிக்க பாமக விரும்பவில்லை. அதே நேரத்தில் இட ஒதுக்கீட்டு போராட்டத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு அரசு வேலையும், பிற உதவிகளும் பெறுவதற்கான அனைத்து உரிமைகளும் உள்ளன; அவற்றை வழங்க வேண்டியக் கடமையும், பொறுப்பும் அரசுக்கு உள்ளது. அவற்றை அரசு தட்டி கழிக்க முடியாது. அவர்களுக்கும் உடனடியாக அரசு வேலை வழங்கப்பட வேண்டும்


Rail Freight


# தவெக ஆட்சியில் அனைத்து துறைகளிலும் லஞ்சம்: நயினார் நாகேந்திரன் சாடல்

மீனம்பாக்கம், ஜூலை.12-

பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது: கரூரில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான 3,085 ஏக்கர் நிலத்தை தனியாருக்கு தாரைவார்த்து கொடுத்துள்ளனர். 'எங்கள் ஆட்சியில் லஞ்சம் இல்லை' என முதல்வர் விஜய் கூறியுள்ளார். எனினும், தவெக ஆட்சியில் அனைத்து அரசு துறைகளிலும் லஞ்சம் கொடுப்பதை ஆரம்பித்திருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது.

கரூரில் உயிரிழந்த 41 பேரின் குடும்ப வாரிசுகளுக்கு அரசு வேலை வழங்குவதில் எங்களுக்கு





எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அதே நேரத்தில் பல துறைகளில், வாரிசு அடிப்படையில் பலருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படவேண்டியுள்ளது. அவர்களுக்கு கொடுத்துவிட்டு, பிறகு கரூரில் உயிரிழந்தவர்களின் குடும்ப வாரிசுகளுக்கு கொடுத்தால்தான் சரியாக இருக்கும். கரூரில் முதல்வர் விஜய்யின் பேச்சு, இந்துக்களின் மனம் புண்படும்படியாக அமைந்திருப்பது மிகுந்த வேதனையாக உள்ளது. தேர்தல் பிரசாரத்தின்போது கரூர் கூட்டத்துக்கு மதியம் 12 மணிக்கு வருகிறேன் என கூறிவிட்டு, அன்றிரவு 7 மணி யளவில் ஏன் விஜய் வருகை தந்தார்? அதன் காரணமாகத்தான் கரூரில் இத்தகைய மனித உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்






Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161